தினமலர் (15.07.2019)

# மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா

வேலாயுதம்பாளையம், ஜூலை 15-

புகழூர் டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் பிளாஸ்டிக் விழிப்புணர்வு போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடந்தது.

டிஎன்பிஎல் நிறுவனம் தனது சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி உள்ள புகளூர், நொய்யல், புன்னம், பு.தோட்டக்குறிச்சி, மூலிமங்கலம், வேலாயுதம்பாளையம் உட்பட 11 அரசு பள்ளிகளில் 6ம்வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பிளாஸ்டிக் தீங்கு குறித்து விழிப்புணர்வு ஏற் படுத்தும் வகையில் கட்டுரை, ஓவியம், பேச்சு போட்டிகளை நடத்தியது.

இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா புகளூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடந்தது. டிஎன்பிஎல் முதன்மை பொது மேலாளர்கள் மனிதவளம் பட்டாபிராமன், உற்பத்தி தங்கராஜு, உதவி பொது மேலாளர் சுற்றுச்சூழல் ரவி, முதுநிலை மேலாளர் ராஜாராம் ஆகியோர் வெற்றி பெற்ற 48 மாணவர்களுக்கு பரிசு மற்றும் நோட்டுப் புத்தகங்களை வழங்கி பேசினர்.



டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில் நடந்த பிளாஸ்டிக் விழிப்புணர்வு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு டிஎன்பிஎல் முதன்மை பொது மேலாளர்கள் மனிதவளம் பட்டாபிராமன், உற்பத்தி தங்கராஜு, உதவி பொது மேலாளர் சுற்றுச்சூழல் ரவி, முதுநிலைமேலாளர் ராஜாராம் ஆகியோர் பரிசு வழங்கினர்.